மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சோழவரத்தைப் பற்றி மட்டும்தான் கேட்டிருக்கிறார். ஆகவே, பெண்ணாத்தூரைப் பற்றி தனியாக அவர் அருள்கூர்ந்து வினாவை எழுப்புமாறு கேட்டுக்கொண்டு, சோழவரத்தைப் பொறுத்தவரை, இந்தக் குடியிருப்புக்காக, பகுதி குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் குடியிருப்பில் இரண்டு பொதுக் கிணறுகள் மற்றும் இரண்டு ஆழ் குழாய் கிணறுகள் ஏற்கெனவே இருந்து வருகின்றன. எனினும் அவற்றின் கொடுதிறன் போதுமானதாக இல்லாத காரணத்தினால் 1993-94 ஆம் நிதியாண்டிலே முடுக்கிவிடப்பட்ட கிராமக் குடிநீர் திட்டத்தின் கீழ் சோழவரம் மற்றும் அதைச் சுற்றியிருக்கின்ற காலனிக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க ஏற்கெனவே அரசு திட்டமிட்டிருக்கிறது. இதற்காக அமைக்கப்பட்ட ஆழ்குழாய் கிணற்றில் நீர் கொடுதிறன் போதுமானதாக இல்லாத காரணத்தினால் மீண்டும் நீர் ஆதாரம் தேடப்பட்டு வருகிறது. நீர் ஆதாரம் கிடைக்கப்பெற்றவுடன் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு, திட்டம் விரைவில் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. தா. வேடியப்பன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் ஆதாரம் கண்டவுடன் இதற்குண்டான ஆயத்தம் செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி. அதனை இந்த ஆண்டிலே செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக இந்த ஆண்டு இந்தப் பணி விரைவிலே முடுக்கிவிடப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 259, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

259—

ஆதிதிராவிட வகுப்பிலிருந்து கிருஸ்துவர்களாக மாறியவர்களை ஆதிதிராவிடர் பட்டியலிலேயே சேர்த்தல்.

* *24631*—**டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1994 ஏப்ரல் 11]

ஆதி திராவிட வகுப்பிலிருந்து கிருஸ்துவர்களாக மாறியவர்களை ஆதிதிராவிடர் பட்டியலிலேயே சேர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டியல் மைய அரசால் பராமரிக்கப்படுகிறது. இந்தப் பட்டியலில் குறிப்பிட்ட ஓர் இனத்தை சேர்க்க வேண்டுமா அல்லது வேண்டாமா என்று முடிவு செய்யவேண்டியது மைய அரசுதான். எனவே, ஆதிதிராவிட வகுப்பிலிருந்து கிறிஸ்துவர்களாக மாறியவர்களை ஆதிதிராவிடர் பட்டியலிலேயே சேர்க்கவேண்டும் என்று கோரி வரப்பெற்ற மனுக்கள் மைய அரசின் உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளன. இது பற்றிய மைய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிருஸ்துவனாக ஒரு ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த ஒருவன் மாறுவதால் அவனுடைய வாழ்க்கைத் தரத்திலே எந்தவித மாற்றமும் கிடையாது. குப்பன், கியூபன் ஆகிறான். ஜெயசந்திரன், ஜேம்ஸ் ஆகிறான். ஐய்யனார், ஐய்சக் ஆகிறான், மண்ணாங்கட்டி மத்தாயி ஆகிறான். ஆனால் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்திலே எந்தவித மாற்றமும் கிடையாது. ஏழையாக இருக்கிறான். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே ஒரு குடும்பத்திலே ஒரு அண்ணனும் தம்பியும் இருக்கின்றபோது; அண்ணன் ஹரிஜனாக இருக்கிறான். ஆனால், தம்பி கிருஸ்துவனாக மாறுகிறபோது அவன் பி. சி. ஆகிறான். அண்ணனுடைய மகன் மருத்துவக் கல்லூரியிலே சேர்ந்து மருத்துவன் ஆகிறான். ஆனால், அந்த மதம் மாறிய காரணத்தினால், கிருஸ்துவ மதத்திற்கு வந்ததன் காரணமாக அந்தத் தம்பி மகன், அவன் பெறவேண்டிய சலுகைகளை எல்லாம் இழக்கிறான். எனவே, இந்த மாமன்றத்தின் வாயிலாக ஒரு தீர்மானத்தைப் போட்டு, மத்திய அரசுக்கு நம்முடைய கருத்துக்களை, இந்த அரசு தெரிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை பெறப்பட்டு, மத்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். வேண்டுமானால் வலியுறுத்தலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாக ஒரு தீர்மானமாகப் போட்டு வலியுறுத்துவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு வரக்கூடிய கோரிக்கைகளை மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறது. அதற்கு முடிவு எடுக்க வேண்டியது, மத்திய அரசு. மத்திய அரசு விரைவில் முடிவு எடுக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மத்திய அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கை. திரும்பத் திரும்பக் கேட்டாலும் அதுதான். இங்கிருந்து மத்திய அரசுக்கு அனுப்பலாம்.

வினா எண் 260, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

260—

நரிக்குறவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.

* *20235*—**டாக்டர் பெ. வீரபாண்டியன் :**

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நரிக்குறவர்கள் நிலையான வாழ்க்கை நடத்தி பொருளாதாரத்தில் முன்னேற அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இவர்களுக்கு மானிய விலையில் துப்பாக்கி, தோட்டா, ரவை (Balls) ஆகியவை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நரிக்குறவர்களுக்கு இத்துறை மூலம் 3 சென்ட் வீட்டுமனை இலவசமாக வழங்கப்படுகிறது. அவ்வாறு இலவசமாக வீட்டுமனை பெற்றுள்ளவர்களுக்கு அரசு செலவில் தொகுப்பு வீடுகளும் கட்டப்பட்டு வருகிறது. இச்சிறப்புச் சலுகை தவிர இத்துறையால் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்து சலுகைகளும் இவர்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) நரிக்குறவர்களுக்கு மானிய விலையில் துப்பாக்கி, தோட்டா, ரவை ஆகியவை வழங்கும் செயற்குறிப்பு ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.